சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP NO. **242 / 2016**

பெயர்: துரை ம.சா. 2 தேதி. **29.07.2025**

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் விபத்தை நேரடியாக பார்த்தேன். மேற்படி விபத்து சம்மந்தமாக மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்து இரவு 9.00 மணிக்கு நடைபெற்றது. மேற்படி விபத்தானது குளித்தலை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் தண்ணீர்பள்ளி அருகில் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி விபத்தின்போது ஆட்டோ ஓட்டுநர் மருதூரில் இருந்து குளித்தலை நோக்கில் வந்து கொண்டிருந்தார். கிழக்கில் இருந்து மேற்கு புறம் நோக்கி வந்து கொண்டிருந்தார். அரசு பேருந்தானது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றது. மேற்படி ஆட்டோ ஓட்டுநர் சரியான விதிமுறைகளை பின்பற்றினால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. ஆட்டோ ஓட்டுநரின் மேற்படி விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து சம்பவத்தை காட்டுவதற்கான மாதிரி வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்தால் உண்மை தன்மை தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு ஆட்டோ ஓட்டுநரின் கவனகுறைவு, ஆஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரியல்ல. பேருந்தின் ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்து சம்மந்தமாக குளித்தலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். மேற்படி விபத்து சம்மந்தமாக வேறு நீதிமன்றங்களில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் அளித்துள்ளேன். மேற்படி வழக்கானது விடுதலை ஆகிவிட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபத்திற்கு ஆட்டோ ஓட்டுநர் தான் காரணம் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தில் இறந்துபோனவர் என்னுடைய உறவினர். மேற்படி விபத்தில் இறந்துபோனவர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம் /-(ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.